786

திருநாகூர் காரணச் சிந்து

வண்ணச் சந்தக் கும்மி

இஃது

மானாமதுரை M. மஸ்த்தான்கனி அம்பலம்

என்று பேர்விளங்கிய

அம்பல மஸ்த்தான் அவர்களால்

இயற்றியதை,

ஷெடியாரால்

மதுரை வடக்குமாசி வீதி, குருசாமிக்கோனார் சந்து

ஸ்ரீராமச்சந்திர விலாசம் பிரஸில்

பதிப்பிக்கப்பெற்றது.

1949. [காப்பி 1000.

MADRAS
O-,85MAM,T
N49
LS 8571

786

பிஸ்மில்லா ஹிர்ற ஹ்மானிர்றஹீம்

திருநாகூர் காரணச் சிந்துவண்ணச் சந்தக்கும்மி.

திருவடிவாய்ப் பொருள்பஞ்ச பூதங் காலந்
திக்குமனம் ஆன்மாவாய்ச் சேர்க்கை யாகிக்
கருவடிவாய் நித்தமனித் தமதாய்ப் பண்பு
கலந்துதொழிற் கிடமாகிக் காண்பா னாகி
யுருவடிவாய் ஆண்பெண்ணும் பலரென் றாகி
யொன்றாகிப் பலவாகி யுலகமாகி
அருவடிவா யெவைக்குமுதன் மூலமாகி
ஆனந்த மயமான றகுமான் காப்பே.

கொச்சகம்

பூதவுட லேயுட் பொருந்துகின்ற ஜீவியமே
நாதவொலியே நடனமிடும் பூரணமே
சோதிமணி யேசுடரே சொரூபமென
ஆதமரபார் அண்ணல் முஹம்மதுவே.

என்னுட் பரவசமா யின்பமய மாய் நிறைந்தே
யுன்னத் தளிர்த்தே யுளந்திதிக்கும் பூங்கரும்பே
வண்ணக் கமல ‡ மலர் முகையின் மாமுருகே
சென்னத் தளுய்க்கும் திருவே முஹம்மதுவே.

‡ மலர்முகை - மலர்ந்துகொண்டிருக்கும் முகை.

அன்னையினுந் தானதிக மன்புடையீர் நுங்கள் பதந்
தன்னைவிடுத் தேயித் தாரணியி லற்பர்களைப்
பின்னைத் துணைப்பிடித்துப் பேராசை கொண்டலைந்த
என்னைரட் சித்திடுகா ளிதுவே முஹம்மதுவே.

உலகம் புகழும் வலிமார்க்கும் உம்பர் முதல யாவருக்கும்
இலகு தவசி ரோமணியா யிம்பருதித்தே மகிமைபெறும்
அலகில் கருணைப் பகுதாதூர் அரசே ஷெய்கு திருவமிட
திலகமான முஹியித்தீன் திருவே நுமதாள் அடைக்கலமே.

தேனொழுகப் பேசுகலைத் திறனுடைய ரெணவுலகஞ்
சிறப்பிற் கூற
வானுலகும் புகழ்படைத்து மண்ணுருவப் புதைப்பவனை
வாழ்த்துவேனே
தீன்வளரத் தினம்வளருஞ் ஷெய்பிதெனுங் குலம்வளரத்
திருவினோங்கு
பானுவெனும் பகுதாது முஹியித்தீ னண்டகையாம்
பரமதேவே.

திருவினை யுடையார் தவத்தள வுணர்ந்த
செல்வமே தெய்வபொக்கிஷமே
யருள்நிலை யளிக்கும் ஆண்டவன் றனது
அனந்தர அகமியப் பொருளே
மருவிய ஷெய்கு வமிடசுந் தரரே
வள்ளலே யடியனென் மீது
கருணை செய்தாள வேண்டினே னப்துல்
காதிரே நாகை நாயகரே.

காலிருக்கத் தோளிருக்கக் கையிருக்க மெய்யிருக்கக்
கலைத்திடாமற்
பாலிருக்கச் சோறிருக்கப் பசியின்றிப் புசித்திருக்கப்
பாடனேக
மேலிருக்கக் கயவர்தமை விரும்பிநிதம் பாடுவனோ
விதியிலாமற்
சேலிருக்குந் தடநாகைத் திருப்பதி ஹமீதொலியென்
தேவதேவே.

குறள் வெண்பா.

சந்தப்பாச் செப்புவேன் ஷாகுல் ஹமீதொலிக்கே
மந்தர்க்குச் சொல்லேன் மறந்து.

வெண்பா.

வஞ்சனைபோம் பேய்போம் வறுமைப் பிணிபலபோம்
மிஞ்சுபல சம்பத்து மேவுமே—அஞ்சணமார்
சாகி பொலிகள் திருத் தாண்மலரைப் போற்றிசெய
வாகையுறு மென்மேலும் வாழ்வு.

நான்மறைக் குயர்ந்தவேத நாயக ரிறசூ லுல்லா
தீன்மறை விளக்கவந்த செய்தியிப் ராஹீம் வள்ளல்
வான்மிகு சேனைநாதர் வரிசைசேர் மின்னூறு
தீனெறி யெனுமுதாதை திருமலர்ப் பாதம் போற்றி

பொழுதெல்லாம் வயிற்றுணவுக் கரும்பாடு சிறிதகிலே
பொழுது மீந்தால்
பழுதுபடு முலகார்த்தம் பெரியோர்கள் புகழ்பாடு
பக்தி கொஞ்சம்
எழுதுதற்கு நேரமில்லை சரிபார்த்துப் பிழைதிருத்த
இயலா வென்னை
முழுதுணர்ந்த பெரியோர்கள் பொறுத்தருள வேண்டுவது
முறைமை தானே.

பிஸ்மில்லா ஹிற்றகுமா னிற்றஹீம்,

நூன்முகம்.

திருவுற்றிலகு கங்க வரையில்—என்ற மெட்டு.

திருவுற்ப வம்விளங்க வொருதற்ப ரனிலங்கு
திகழ்முத் தொளிதுலங்கு சோதியாய்ப் புவி
ககனத் தறுசினந்த மாதியா யுயர்
தேவர்மானிட ராதியாகிய சீவர்யாவரு மேசராசர
ஜெகமுற்ற ணிசிறந்த கோலமாய்த் தரு
புகழ்பெற்று ருவணமந்து சீலமாய் (1)

வருகற்றி கிரியந்த வடிவத்து லகில் வந்த
மனிதர்க்கே வருண்முந்தும் ஆதமே செயுந்
தனிகற்ற வய்வினொந்த போதமே கமழ்
வாசமாமல ருடுமேவிய தேசுபோனூறு காசிமாகுல
வமிசத் தருள்சுரந்து கேமியே கொடு
தமியற் பொடுபுரந்து பூமியே (2)

அருண்மிக்கு லவுமெங்க ணமிகட்க ரசர்தங்க
வருமைப்பு தல்விதந்த பாலரா யுது
சுரர்பொற்ப தம்வணங்கு சிலரா வெழில்
ஆசிலாவச ஞரின்மாமறை பேசுமோருச ஞரிமேனர்மா
பதினற்ற வமிருந்த வேதியர் நீறை
மதியிற் றறவணிந்த நீதியர் (3)

தருணைப்பொ ருவதன்றி தொருகற்ச வனமென்று
தரையிற் புகழ்பொருந்து நாகையில் வர
மருணற்ற வமிருந்த வாகையில் வளர்
தாலமேபுகழ் ஷாஹமீதொலி சில்நாயகர் மீதிலே துதி
தகையுற் றிலகுகின்று பாடவே இரு
றஹீமைப் பணிவமன்பு கூடவே (4)

சீர்வளரும் பசுந்தோகை மயிலான்—என்ற மெட்டு.

பாகூருங் கரும்பிரச மமுதம் கறவு
பழரசமு மிகர்சிங்கா பங்கயம தெகின
நாகூருந் திருநாகூர் வளரும் குத்பு
காதரப்துல் காதிறொலி மீதுதமிழ்ப் பாட (1)

சருவமய மானபரஞ் சோதி விமல
சர்வபரி பூரணச தானந்த ஞதி
அருகமற் றுகிபீ ஞண இறைவ
னருள்பெருத மடியினையென் முடியின்மிசை யேற்றி (2)

வருமுலகி நபிமார்கள் சிகரம் வரத
மாதவர்கள் போற்றுமக மூதர்சார் திலகம்
திருமகுவு மறுசின்முடி யேறும் கடண
சீர்பாத கமலத்தைச் சிரசில்வைத்துப் போற்றி (3)

மிகுதாது சொரியுமலர்ச் சோலை மருவி
விளையுருசி முதிர்கனியி னளவிலா தாலே
பகுதாது நகரில்வளர் சுல்தான் எங்கள்
பரமகுரு முஹயித்தீன் சரணமலர் துணையே (4)

நாட்டுச் சிறப்பு.

பொன்னுலவு சென்னிகுள—என்ற மெட்டு.

சந்தமும்ப ரிமளசு கந்தமுந்தி மிர்ந்தணைந்த
சம்ப்ரமமி குந்தநடை யன்னமே உயர்
அந்தரவ ணங்கைநிகர் சொன்னமே கன
தருவினுலவிய சவனநகரிவன்
மருவியிலகுதல் கவினுபமுமிய
சங்கொலிமு ழங்குநிரு னகையே யதன்
துங்கநல்வ ளங்கள் சொல்வேன் தோகையே (1)

சந்ததஞ்சி றவர்நிகர் பந்தயம்பொ ருதுகிளை
இந்தொடுந்தொ டாருமீனக் தோங்குமே பயம்
வந்தெனவி ழிந்நூகனி தாங்குமே யதைப்
பரிவி னொடுகவி கொணரு முறவென
வரிய தருவதி மலரி னறுமணம்
பண்புறக்கொ ணர்ந்துசெலுந் தென்றலே நகர்
விண்புறத்தி லுங்கமழு மன்றலே (2)

பைந்துணர்ம லர்க்கிரிந்து சிந்துநூக றவமொடு
பைங்கிளிகு யிலினங்கள் கோதியே யுணுஞ்
செங்கனிர சமுமலே மோதியே குளிர்
பனிகொ ளுயர்வரை யருவிநதியென
பழனமதனிடை பெருகி மடைவழி
பாய்ந்திடச்செங் கன்னல்தெங்கின் மேவுமே யதைப்
போர்துறச்செந் நெல்வளர்ந் தாவுமே (3)

கந்தடர்வி கடதடச் சிந்தரக்கு தூபொலிக்கு
வந்தனைசெ யுற்கெனவே தாவியே கிளை
யுந்தியம லர்பரித்துத் தூவியே செழுங்
கனகமணியொளிர் கிரணசுடர்விரி
யாரணமதிகடு விலகுமுயர்தரு
காவினைவ லங்கொளுநற் காட்சியே நிகர்
பூவிலேவி டையாதிதன் மாட்சியே (4)

நகர்ச் சிறப்பு.

இப்பளருங்கதிரை நாதன்மேல்சிந்துபாட
என்ற மெட்டில் பின் சந்தம்.

பூரணச் சந்திர விம்ப மேவத ணாவிந்தப்
பொருப்பினை வென்றதனப் பூவையே இழை
மருப்பென நின்றசொர்னப் பாவையே நிரை
பொங்கிய சங்கமு ழங்குக ருடங்கடல்
வங்கமு டைந்துபொ ருந்தவி ளங்கொலி
புகழ்க்குறும் நாகைவளம் வஞ்சியே தகி
நிகழ்த்தவன் கேளுவகை மிஞ்சியே (1)

வாரணங் கண்டபொ தங்கப் பேரிடங் கர்கிடந்து
மலைக்கர சன்றுசிறை காப்பவே யுகு
மலைக்கட லென்னவெயில் காப்பவே யகழ்
வந்துவ ளைந்திட வுந்திர தங்கொள்த
டம்பரி நின்றுத யங்குபு செங்கதிர்
மலைக்கவு யர்ந்துறும்வின் ணட்டையே தொடு
மலைக்கணி வந்தசெழுங் கோட்டையே (2)

மாதன மேவிரும்பிச் சீரய ணடுசென்று
மரக்கல வர்த்தகங்க ணடியே செயுந்
தரத்துயர் வித்தகர்பல் கோடியே யுறு
மண்டல மெண்டிசை யும்புகழ் கொண்டுயர்
விண்டல மூந்தசி றந்தொளி தங்கிய
மணித்திரள் வைத்தமுத்து மாடமே திருப்
பணிக்குயர் சித்திரப்பொற் கூடமே (3)

சிதவர் ணப்பளிக்கு வேதிகை யேதுலங்கு
சிறப்புயர் வச்சிரந்தூ ணட்டியே கதிர்
திறத்துப்பி னுத்தரங்க ணீட்டியே உயர்
செம்பொனி லங்குகு டங்கள்நி றைந்ததி
சம்பரம மிஞ்சிவ பங்கெழு முன்றில்கள்
திளைத்தெம ருங்குமகிர் சோதியே யறம்
வளர்த்திடும் வர்த்தகர்கள் வீதியே (4)

மாளிகை யேசெறிந்த கோலமி குந்த தொங்கல்
வளைப்பணி லக்குலங்கு மாட்சியே தருக்
கிளைத்தெழுங் தெங்குமலர்க் காட்சியே மிகு
வகைவகை யாய்நவ மணிமுத லாகிய
சகலமு மேநிறை வதினலே மோதிய
வரிக்கட லொத்ததெனும் நீதியே பல
சரக்குக ளுற்றகடை வீதியே (5)

நீலக்க லாபமயில் போலொத்து லாவுசொர்ண
நிறத்தளிர் மேனியதன் மீதிலே யணி
நகைக்கள பங்களுதிர் போதிலே யொளி
நிறைவளை மாதர்கள் தெருவதி லேயிடு
துகளது மேவிய மலர்சொரி தாதென
நெறிக்கண தெங்கு மணம் வீசுமே வளி
புறத்து ளரங்கமதிற் பூசுமே (6)

தாவள மானவண்ணப் பூவலர் மண்டபத்திற்
றரித்திளங் காதலர்க ளோடியே செலு
மடக்கொடி பின்னயந்து வோடியே மகன்
றடம்தை யேகில மென்றும ருண்டுறு
சலமதில் வீழ்வது கண்டுவி யந்தனி
தருக்கி நகைக்குமடப் பூவையே பன
விரைக்கள பக்குயப்பொற் பாவையே (7)

மாவள மோங்குமிந்த காவலன் திவுமுந்த
வரத்துயர் நற்றவஞ்செய் யோகமோ சுவர்
புரத்திலுக் கப்புறமே லோகமோ வென

மகிமைய தேகிறை யந்தமி குந்திடு
தகைகமயி ஞர்பல விந்தைதனு லங்கிய
மகத்துவ மேயணங்க நாகிலே புரை
வகைத்தென லாகுமிந்தப் பூமிலே (6)

புள்ளிக்கலாபமயில் பாகன்—என்ற மெட்டு.

வள்ளற்கு யர்ந்தகொடை யீசர் திவ்ய
வரதரா சர்மக ராசர் தினம்
வானத்தோர் திரண்டு தானத்தே வணங்கு
நாதர் மஹா மூதர் (1)

அள்ளிக்கொ டுக்குங்கொடை மாரி நிக
ரமுத ஞானகலை வாரி எங்க
ளாதிநூ தர்மறை வேதநா வுறுகு
பேரர் திருப் பேரர் (2)

வன்னக்க மலமலர்ப் பாதர் எங்கும்
வரிசை யோங்குமப்துல் காதர் அருண்
மாகமே செறியுஞ் ஷாகமீ தொலிகல்
வாசஞ் செயுந் தேசம் (3)

செந்நெல் விளையும்வள நாடு தமிழ்
சிறந்து மேவுபுகழ் நீடு பல
தேசமே கமழும் வாசநாகூர் மலர்
வாவி யிசை மேவி (4)

விண்ணிற்கு யர்வுதரு கங்கை சொர்க்க
மேவுங் கௌதரெனுஞ் சங்கை மிகும்
வேதமீ திறைவ னேனுமா நதியொவ்
வாது இது போது (5)

பண்ணிற்கி சைந்தராகம் பாடும் வண்டு
பருகவே யுணவை நாடும் தொறும்
பாவையா ரதர மோதியே திரும்பும்
பண்டு மலர் கண்டு (6)

பொங்கும முதுகடை கம்ப மெனும்
பூர்ணச்சந் த்ரனது பிம்பந் தனைப்
பூமலர்த் தவிசென் றேமயங்கி யன்னப்
புள்ளு மன துள்ளும் (7)

கொங்குலா வுமலர்க் கூந்த லவிர்
கோதைமார் புனலி னீந்த லுறக்
குழல்மி தந்திடுமுள் விளைவுறுஞ் சைவலக்
கொத்து நிக ரொத்து (8)

என்னடி நான்பெற்ற மங்கை—என்றமெட்டு.

கொஞ்சுங் கிளிமொழி மானே பசுந்தேனே மலர்க்கானே ரெனுங்
கோமள நாகரீற் றூனே வளர்
குறுபாகிய மிருகாரணர் தருகாவள மதுகேளடி
கோகில மேயிசை வாணி கீர்
மாக வரசியின் த்ராணி (1)

தஞ்சை நகர்மக ராசன் திருவாசன் பிரகாசன் வருஞ்
சங்கடந் தீரவல் லாசன் செயுந்
தவராஜர்த னுயர்கோயிலி னழகாகிய முறையேகலை
தங்குமுயர் சிற்ப நூலைப் பெறு
தங்கத்தி ருப்பணி வேலே (2)

சந்நிதி முன்னெதிர் நேராய் வெகுசீராய் யுயர்தாரா பதி
தன்னைத்தொடு நன்மணரா கதிர்
தருமாமணி பலசூரிய னொளிவீசிய சுடராமெனச்
சந்ததமு மிருள் விளக்குங் கொடி
சார்ந்து சுவனத்தை யளக்கும் (3)

பொன்னொளிர் வண்ண மேன்மாடி பலகோடி மணிசூடி மதில்
பூணும் பளிங்குக் கண்ணாடி எங்கும்
புதுமைய தாகவே கூறிடும்! அதிகவி னோதம கோனத
பூரணர் பள்ளிகொள் சிறப்பு மிகும்
பொங்குமணி நலமுகப்பு (4)

காரண மிக்கவி னோதர் தவநாதர் மஹமூதர் புருக்
கான்மறைச் சன்மார்க்க நீதர் தங்குங்
கனகம தேழ்நிலை மாடம் இனமணி சூழ்வக பாடம்
கண்ணைக் கவர்தரு காட்சி புகழ்
கற்பக நாடுறு மாட்சி (5)

ஆரணர் கோட்டத்தின் மீது உயர்சேது நிறத்தாது தன்னு
லாகுந் தசும்பிணை யேது புற
வாயிர மாயிரங் கூடி நாயகர் சந்நிதி தேடி
அன்புடன் சேவலும் பெடையு மாக
அண்ணல் றவுலாவி னடையும் (6)

தொங்கும் பல்லாயிரம் பளிங்கு களிற்றுலங்கு வண்ணமிலங்கு வெகு
சோதியின் சாரங்கொண் டியங்கு பல
சேடணை யானகு ளோப்புகள் நீடிய ரசமணி வார்ப்புகள்
சொல்ல வொண்ணாதசிங் காரம் இணை
யில்லாத தீபாலங் காரம் (7)

சங்கையுடன் வெகுநீதி மதவாதி பலசாதி நரர்
சார்ந்துயர் பாத்திஹா ஓதி யவர்
சமரசமாய் மனமீதுறை திமிரமகன் றுபினேர்முறை
தன்னைக்கடைப் பிடித்துறுவார் உயர்
நன்மைப் பலன்பல பெறுவார். (8)

கும்மிப் பாட்டு.

காப்பு வெண்பா.

திருமருவு நாகைத் திருப்பதி வாழ்நாதர்
மருமருவு தாட்கணியாய் வாழ்த்து—பெருமைமிகு
கந்தச்சந் தக்குமிப்பாக் காரணத்தாற் சொல்லவிசைக்
கந்தச்சந் தத்திறைதாள் காப்பு.

சுந்தர நாகைப் பதிவளர் நாயகர்
செந்தமிழ் கும்மி தமிழ்ப்பாட
சுபசம்ப்ரம மிருமைந்தரு நிகர்துங்கன னபிபங்கயத்
தூய திருமலர்த் தாடுணையே (1)

நாகைப் பதிவளர் ஷாகுல் ஹமீதொலி
நாயகர்மேற் கும்மிப் பாட்டுரைக்க
நலமிஞ்சிய தொழிலும்பர பலமுந்தவ நிலையுந்தரும்
நாதர் முஹயித்தீன் தாளிணையே. (2)

ஆரண நாகைப் பதிவளர் நாயகர்
காரணக் கும்மி தமிழ்ப்பாட
அதிரஞ்சித கவியம்பதி தனிலின்புற வளரிங்கித
அஞ்சண மார்தம் பதம் பணிவாம். (3)

மஞ்சடர் சோலைப் பொழில் சூழுந்திரு
வானரவீரப் பதிவாழும்
மதிதங்கிய குலநண்பொடு நிதிதங்கிய எழிலும்பெறு
மஹமதம்பலம் செய்தவத்தோன். (4)

வாரணமேறிய வீரர்முன் சேய்சிறு
மாத்தின் குஞ்சர மூர்த்தமென
வடிசெந்தமிழ் முறைபண்பொடு மறியுந்திற மிலியிங்கிதை
வகுத்தேன் மஸ்த்தான்களிப் புலவோன். (5)

செய்யதிருவொளி பக்தி மேலிட்டிடைச்
செப்பினே னிசைப் பெருக்கதனால்
சீர்கற்பனை யேதப்பினு மாவிற்பன ரேயற்பொடு
சிந்தை மகிழ்ந்தா தரித்திடுவீர் (6)

சொர்க்கத் தரம்பைய ரைப்பழிக்கும் மாதர்
வர்க்கந் துயர்ந்த வனப்பினரே
சோலைக்குயி னேரற்புத மாலைத்தரு மோர்கற்புடைச்
சுந்தரமேவு சவுந்தரிகாள் (7)

வாலைப்ப ருவஞ்சேர் மங்கைநல் லீர்பசும்
பாலைப்பைந் தேறலை வென்ற சொல்லீர்
வாகைத்திரு நாகைப்பதி மேவற்புதர் மீதிற்கும்மி
வஞ்சியரே கொட்ட வேவருவீர் (8)

குங்குமத் தாரணி தோளசைய மிளிர்
கும்பஞ் சுமந்தே மருங்கொசியக்
கூடிப்புகழ் தேடிப்பதம் நாடித்துதி பாடிக்கும்மி
கொட்டுங் குடிலம் பறந்திடவே (9)

மாணிக்கப் பூரசன் குத்தூச ருந்தவ
மாமகவாகிய மாதவரா
மதிஞவள ரஞனெனு முதுமாகிலை யதின்மேவிய
வள்ள லிறசூல் பவுத்திரராம் (10)

ஷெய்யிதெ னுங்குல மோங்கிடவே நமர்
செய்த வினைபல நீங்கிடவே
திசையாதினு முறுமானிடர் மதபேதம தறவாழ்வுறு
சேர்மிகும் ஒற்றுமை தேங்கிடவே (11)

நற்றவ மோங்கித் துறவணிந்தே தவர்
காணூற்றி நால்வராம் சீடருடன்
தலமார்பல தலமேவியு முயர்காரண மிகவேதிரு
நாகூ ரெனும்பதி யிலமர்ந்தே (12)

தஞ்சை நகராள் மகராஜன் வினை
தன்னைத் தவிர்த்த குருராஜர்
தவராஜர்கள் புவிராஜர்கள் கவிராஜர்கள் சுரராஜருந்
தாளிணைப் போற்றுங் கருணேசர் (13)

வஞ்சனை சூனியம் பேய்பிணி சூழ்ந்து
வருந்திய மக்கள் தமக்கிரங்கி
வலியாரிவ ரெளியாரென மதியாதுறு கலியேகவே
மாவர நல்கு மருள்நாதர் (14)

பக்கீர்க ளுண்ட எருதினல் லென்பினை
பாங்குடன் முன்னுரு வாக்கிவைத்தோர்
பண்டங்கொரு வன்விண்டது கொண்டங்கவ னின்றண்டலைப்
பச்சைக் கிராம்பையு மேயழைத்தோர் (15)

தச்சனின் குன்மந் தனைத்தவிர்த்தோர் குமிழ்
தானின்றிப் பாதுகையே தரித்தோர்
சங்கந்திகழ் பொங்குங்கடல் வங்கங்கெட வுங்கண்டதைத்
தன்கைக்கண் ணாடிகொண் டேயடைத் தோர் (16

வள்ளல் தருகாவிற் றெங்கிள நீருக்கு
வாகுடன் கொம்புள தோவெனவே
வம்பன்சொல வுங்கொம்புற வின்பம்பெற வும்நம்பக
மாகத் திருப்பணி செய்யவைத்தோர் (17)

இன்றள வுந்நிக ழற்புதஞ் சொல்லற்
கெளிதோ மகிமைக் களவேது
இன்பங்கொடு முன்பங்குறு துன்பங்கெட வன்பொன்றுவர்
எண்ணிக்கை சொல்லற் கியலாதே (18)

சந்ததம் நாகூர்த் தருகாவை நாடிச்
சார்ந்தவர் நன்மை யடைவரென
சந்தம்புக ழுந்தங்கொலி கந்தங்கம ழுஞ்செஞ்சரண்
சாற்றிக் கும்மி யடிங்கடி (19)

நிலையாமைகூறி அவாமறுத்தல்.

பல்லவி.

போங்காலம் வரும்வேகமா யுடலைவிட்டுப்
போகுமுயிர் சந்தேகமா

அநுபல்லவி.

வேங்கைபோல் இசுராயில் விரட்டிப் பிடிக்கும்போது
ஏங்கிமேல் மூச்சுவாங்க விருந்தவர் கூடியழப் (போ)

சரணம்.

ஆங்காலம் மூர்க்கமாகவே யதட்டிப்பேசி
அன்யோன்யம் விட்டுப்போகவே
பாங்கான கூலிக்காரர் பங்காளிக்குத் துரோகம் செய்தால்
தீங்காய்ப் பலவழியில் சிதைந்தே யுன்சொத்தழிந்து (போ)

சத்தாது சொர்க்கம் கட்டினன் நழுறாது
சாம்ராஜ்யப் பட்டங் கட்டினன்
செத்தா ரவர்களெல்லாந் தேடும் பொருள்களெங்கே
செத்துங் கெடுத்தானென்று சேர்ந்தவர் வசைமொழியப் (போ

செத்தபின் கொடை வழங்கினர் யெனவுரைக்கும்
சிதக்காதி யெங்கே காண் போனர்
நந்தியே இரவலர்க்கு நாடித்தான தர்மஞ்செய்த
உத்தமர் குலத்தைக்காணேம் உங்கள்கதி என்னவாகும் (போ)

எச்சிற்கலைக் காகம் போலவே சொத்துச்சுகம்
இருக்கும் வரைக்குஞ் சாலவே
மச்சானு மாமனுமென்று வந்துவந்து கூடுவார்கள்
எச்சுப்போய்ப் பொருளும்போனல் எட்டிப்பார்க்கநாதியுண்டோ()

அச்சமும் நெறியும் போய்விடும் பணமிருந்தால்
ஆசைஒன்றே வந்து மேலிடும்
இச்சையாலே நலந்தீங்கை எண்ணிடற் கொவ்வாதுமனம்
துச்சமான வாழ்க்கையொன்றே தோணுஞ்சதமென்றதனல்(போ)

பெருமைக்குத் தானஞ் செய்குவார் மனமுவந்து
பிச்சைக்கரைக் காசு தந்திடார்
தருமச்சொத் தெல்லாம்வாரித் தன்னதென் றனுபவிப்பார்
கருமத்தி லேகண்ணுன கயவர்தன் வாழ்வுகெட்டுப் (போ)

திருமந்தி ரத்தினை நிகர் அம்பலமஸ்த்தான்
செப்புதிருப் பாடலை நுகர்
பொருளொன்றி ஞலோபுகழ் பூரண தவசிரேஷ்டர்
அருள்நிறை ஷாகுல்ஹமீ தாண்டகை புகழ்குன்றுமோ (போ)

† இசுராயில்-எமனூர் என்றும் பாடம்.

தேவேந்திர சங்க வகுப்புச் சந்த வண்ணம்.

அறநெறி யிறையவ னருளிய விதிகொடு அவனியில் வரும்நபி யாருஞ்சது ரந்தச னூருஞ்சன முந்தச, வயுதம ரவர்தமில் முறுசலு முதுமறை யவர்களு முளரவ ராராய்ந்தறி யுந்தவ சீர்வாய்ந்த பரம்பரை, யவர்சிர மதிலணி யவர்குல வியன்மணி யரிவையர் முகமுள ஆலூர்ந்து விசும்பிடை யேசார்ந்து தசும்புடை, அறுசிடை முதலவ னுடனுரை பகர்தலு மமரர்க டலைவரோ டாலோன்செறி கங்குலின் மேலேய்ந்து திரும்பினர், (¼)

நறைகமழ் புளகித வடவரை நிகர்புய நலமிகும் வலிகொடு நாடோங்கு பெரும்புகழ் நீடோங்கி யிதம்பெற, நார்கெடு குபிரெனும் வழியற வொழியவும் நசையுற விசைபெறும் நாவார்ந்த விலம்பக மேவாய்ந்த சுயம்புரை நவிறலி னிறைதனை வழிபடு தொழின்முறை நடைமுறை யொழுகுதல் நாகார்ந்த பெருந்திரை யேசூழ்ந்த நிலஞ்செறி, நமர்பலர் வழிபட அவலமி தெனமதி நலிவுறு குறைஷியர் நாரோய்ந்து பெரும்பகை வேரூன்றி விலங்கிட, (½)

மறநெறிய புஜகிலொடு பலதலைவ ருமடைம யிலிகலுற வாதோம்பு கொடுஞ்செயல் கோதாம்படி செய்துற, மதினம துற வது தகுமென வவணுற வதிதலு மிலகிய மாகேந்திர மண்டலர் நிருய்ந்து நலம்பெற மலிதரு படைகொடு பதுரினி லிகல்பொர வருமபு ஜகிலொடும் வாளேந்தி யுறும்படை தூளாம்படி செய்து பின், வருமுகு தெனுமிக லொடுபல சமரினில் மடிவுறு தரியலர் மாவேந்தர்கள் சந்ததி யார்சேர்ந்து முடன்பட, (3/4)

விறல்வலி யதினுல குயர்நெறி நிறுவிய வியன்மூஹ மது ஜபி மேலாம்பரர் தன்குல மேர்தேங்க வருந்தகை விரவு நகாநெடில் சுதரவு காநெடில் மிசைசரக ரவுடல்கொள் வேள்தாங்கு நெடுங்கணை நீர்விங்கு தடம்பதி, விகசித குணநிதி வெகுசனர் துதிகெதி வினை கெட வருள்செய வேதாந்திக ளும்பலர் பாதாம்புய வந்தித, விது முக வசன்குது சருளிய குதுபொலி விரைசெறி ஹமீதொலி மீதோர்ந்து செழுந்தமிழ் தார்வேய்ந்த திலங்கவே. (1)

சந்த வண்ணம் முற்றிற்று.

சிந்து வண்ணச் சந்தக் கும்மி

முற்றிற்று.

முக்கிய கவனிப்பு:- இந் நூலாசிரிய ரியற்றிய 1. மெய்ஞ்ஞான ஜீவரெத்தினம், 2. அறிவானந்த போதம் முதலியன கூடியசீக்கிரம் அச்சாகி வெளிவரும்.